அழகர்சாமி தீர்மானத்திற்கு அவருக்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடிய பதில் சீக்கிரம் சொல்லப்படும் என்று சொன்னார்கள். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் இப்போது இரண்டு மாவட்டங்கள் சேருகிற பகுதியில் வருகிறது. முன்னால் ஒரு மாவட்டமாக இருந்தது. கோவில்பட்டியை ஒட்டியுள்ள சில கிராமங்களை, கோவில்பட்டி தாலுக்காவுடன் இணைத்தால்தான் எங்களுக்கு பல சமூகநலன்களைக் கவனிக்க முடியும். இப்போது அந்தப் பகுதி மக்கள் தாலுக்கா அலுவலகம் செல்ல வேண்டுமென்றால் திருநெல்வேலி போன்ற 30 மைல்களுக்கு அப்பால் உள்ள அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டியிருக்கிறபடியால் அது தொடர்பாக பல்வேறு கோரிக்கைகளைவைத்திருக்கிறார்கள். ஏற்கெனவே அது சம்பந்தமாக 10 ஆண்டுகளுக்கு முன்னால் இதுபோன்ற கோரிக்கை வைக்கப்பட்டு அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. எனவே சீக்கிரமாக அது முடிவு செய்யப்படும் என்று சொன்னார்கள். கோவில்பட்டியை ஒட்டியுள்ள கிராமங்களை சங்கரன்கோயில் வட்டத்திலிருந்து பிரித்து கோவில்பட்டி வட்டத்தில் சேர்ப்பது என்றும், கோவில்பட்டி விளாத்திகுளம், ஒட்டப்பிடாரம் போன்ற 3 தாலுக்காக்களில் இருந்து சில பகுதிகளைப் பிரித்து எட்டயபுரம் தாலுக்கா என்று அமைப்பதற்கான கோரிக்கை ஒன்று ஏற்கெனவே அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது என்றும் சொன்னார்கள். அதை அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தருவார்களா ? அந்த வட்டார மக்களின் நீண்டநாள் கோரிக்கை இது. இந்த முயற்சியில் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : அந்த ஏற்பாட்டில் ஒரு பகுதியை ஏற்கெனவே இந்த அரசு செய்து முடித்துவிட்டதென்பதை மாண்புமிகு திரு. அழகர்சாமி அவர்கள் அறிவார்கள் என்று நான் நம்புகிறேன். தொடர்ந்து சொன்ன அந்த பிரச்சினையை இந்த அரசு பரிசீலிக்கும். ஏனென்றால் நியாயமான கோரிக்கையை வைப்பவர் நீங்கள் என்பதை நான் அறிவேன்.

(ஓ) புதிய மோட்டார் வாகனச் சட்டத்தில் ஓட்டுநர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கல்வித் தகுதிகள் குறித்து.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மோட்டார் வாகன ஓட்டுநர்கள் பிரச்சினையை மாண்புமிகு சட்ட அமைச்சர் மற்றும் மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் நான் கொண்டு வருகிறேன். நான் ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் பேசியிருக்கிறேன். புதிய மோட்டார் வாகனச் சட்டத்தில் ஓட்டுநர்களுக்கு கல்வித் தகுதி வேண்டுமென்று புதிதாக இயற்றி

யிருக்கிறார்கள். பொதுவாக கிளீனராக இருப்பவர்கள் தான் பிறகு ஓட்டுநர்களாக வருகிறார்கள் மிகவும் ஏழ்மையானவர்கள் தான் இந்தத் தொழிலுக்கே வருகிறார்கள். இது கன்கரண்ட் லிஸ்ட்டில் வருகிறது. ஆகவே மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் இந்தக் கல்வித் தகுதி என்ற சிரமத்தைப் போக்குவதற்கு ஒரு நிர்வாக உத்தரவை இடவேண்டுமென்று நான் இங்கே கேட்டுக் கொள்கிறேன். கல்வித் தகுதி என்பது, எம்.எல.ஏ.-வாக வருவதற்கும் எம்.பி.-யாக வருவதற்கும் அரசியல் சட்டத்திலேயே வைக்கப்படவில்லை. நான்ஒரு குறையாகச் இதைச் சொல்லவில்லை. ஆகவே இந்தச்சாதாரண ஏழை எளிய மக்களுக்கு இந்தப் பிரச்சினை வராமல் அரசு பாதுகாக்க வேண்டு மென்ற நிலையில் நான் அவர்களுடைய கவனத்தற்குக் கொண்டு வருகிறேன். நான் மதுரைக்குச் சென்றிருந்த நேரத்தில், தமிழ் நாடு ஓட்டுநர்கள் சங்கத்தின் சார்பில் என்னிடத்தில் இதைக் கொடுத்திருக்கிறார்கள். எனவே ஏழை ஓட்டுநர்களுடைய கோரிக்கையை அரசாங்கம் பரிவோடு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப் பிட்ட இந்தப் பிரச்சினை ஏற்கெனவே அரசினுடைய கவனத் திற்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறது. குறைந்தபட்சக் கல்வித் தகுதி இவ்வளவுதான் வேண்டுமென்று கட்டாயப்படுத்தாமல் ஏற்கெனவே ஓட்டுவதற்கான வேறு பல தகுதிகளை அடிப்படை யாக வைத்து, நிச்சயமாக இந்த அரசு இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு செயல்படுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஔ) மின் கட்டணம் பற்றிப் புதிதாகப் போடப்பட்டுள்ள ஆணை குறித்து.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மின் துறை அனுப்பியுள்ள ஒரு அதிர்ச்சி தரும் ஆணையைப்பற்றி நான் இங்கே கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. குமரி அனந்தன் அவர்களுக்கு தொடர்புடைய அமைச்சர் அவர்கள் அவையில் இல்லை.

(ஃ) ஆலந்தூர் தொகுதியில் அமைக்கப்பட வேண்டிய சுரங்கப் பாதைகள் குறித்து .

திரு. சி. சண்முகம் : தலைவர் அவர்களே, ஆலந்தூர் தொகுதியில் பல ஆண்டு காலமாக நங்கநல்லூர், பரங்கிமலை பகுதியில் இரண்டு சுரங்கப் பாதைகள் அமைக்கப்பட முடியாத நிலையில், மக்கள் அவதிக்கு ஆளாகி இருப்பதால், அவற்றைச் அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்